# திருவாதவூரர் மொழிநடை

சுபதினி ரமேஷ்

## அறிமுகம்

சிவனை வழிபடுதற்கென்று அமைந்த நெறி சிவநெறியாகும். தத்துவரீதியில் செழித்து நிற்பது சைவமாகும். சிவனை உயர்ந்த மெய்ப்பொருளாகக் கருதுவதில் எல்லாச் சைவசமயக் கோட்பாட்டுக் கிளைக்கும் உடன்பாடுண்டு. எனவே, எந்தக் கோட்பாட்டை நாம் பின்பற்றுகின்றோமோ அவற்றிற் சாதனைகள் படைப்பதைவிட உயர்ந்தது வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதாகும். உயர்ந்த ஒழுக்கத்தின் அடிப்படையில் வளர்க்கப்பட்ட ஆளுமை உலகத்திலே என்றென்றும் நிலைத்து நின்று மக்களை வழி நடத்தும். அத்தகைய ஆளுமை கொண்டவர்கள் சமயத்தலைவர்களாக அமர்ந்து மக்களின் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகிறார்கள். இவ்வகையில் நமது சைவசமய குரவர்கள் சிவநெறியில் நின்று வாழ்ந்து காட்டியமையை.

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

என்கிறது வள்ளுவம். இதனையே மாணிக்கவாசக சுவாமிகளும்.

*"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு*
*ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே"*

எனப்பாடி தன் ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளார்.

அருளாளராகி மாணிக்கவாசகர் எனப் பின்னர் பெயர் பெற்ற திருவாதவூரடிகளின் தனித்துவமானது அவரது வாழ்க்கை அனுபவங்களாலும், தெய்வீக

நம்பிக்கைகளாலும் அருளிச் செய்யபட்ட திருவாசக பாடல்களால் மிகத் தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றன.

சைவ நன்மாக்களுடைய முதல் நூல்களாகத் திகழும் பன்னிரு திருமுறைகளுள் எட்டாவது திருமுறையாக இத் தெய்வநூல் அமைந்துள்ளது. இந்த அருள் நூல் பல தலைப்புக்களில் ஐம்பத்தொரு பதிகமாகப் பிரசுரிக்கப் பெற்றிருக்கின்றது. இதன் செய்யுள் தொகை அறுநூற்று ஐம்பத்தாறு ஆகும். ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா முதலிய பாட்டு வகைகளை இந் நூலுள் காணலாம். நூல் முழுவதும் மூவாயிரத்து முந்நூற்று இருபத்தேழு அடிகளில் அடங்கி விடுகின்றது. இதன் செய்யுள்கள், செஞ்சொற்கள் அழகுபெற அமைந்த மணிமொழிகளால் ஆக்கப்பெற்றுள்ளன. 'திருவாசகத்துக்கு உருவாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்றும் 'மனம் கரைந்து மலம் கெடுக்கும் வாசகம்' என்றும் வழங்கும் செய்திகள் இந்நூலின் சிறப்பையும், பரப்பையும் நன்கு தெரிவிக்கின்றன.

இந்தத் தெய்வத்தமிழ் மறையை உலகுக்கு அருளியவர் 'திருவாதவூரர்', 'மாணிக்கவாசகர்', 'ஆளுடைய அடிகள்' என்ற காரணப் பெயர்களால் விளங்கும் ஞான வள்ளலாராவார். இவரைச் சமய குரவர் நால்வருள் ஒருவராக சைவசமயத்தார் போற்றி வழிபாடு செய்வார்கள்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகிய பெரும் நூல்கள் இன்றளவும் இருந்து வருகின்றன. திருக்குறளைப் போல இவற்றுள் பெரும் பகுதியானவை பத்து அல்லது பதினொரு பாட்டுக்களால் ஆக்கப்பெற்றிருத்தலினால் இடைச்செருகல்களுக்கு இடம் இல்லாமல் போய்விட்டது.

அடிகளாரின் உண்மையான வரலாற்றைச் சொல்லும் எந்த ஒரு நூலும் இதுவரை கிடைத்திலது. திருவாதவூரடிகள் புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல், நம்பி திருவிளையாடல் போன்ற நூல்களில் அடிகளார் வரலாறு மிகப்பல மாறுபாடுகளுடன் காணப்பெறுகிறது. இதனைப் பாடியவர்கள் இறையன்பர்கள் என்பது தவிர வரலாற்று உண்மை காணும் அறிவு படைத்தவர்கள் அல்லர். இவர்கள் மூவரும் அடிகளார் அமைச்சராக இருந்தார் என்ற ஒரு செய்தியைப் பாடிச் சென்றுள்ளனர்.

தேவாரப் பாடல்களைப் போல் அல்லாமல் திருவாசகப் பாடல்களின் அமைப்பு முறை முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றது. சுந்தர் காலம் வரையில் பண்முறை பழக்கத்தில் இருந்து வந்தது. மாபெரும் அறிஞராகிய திருவாதவூரர் இவற்றை படித்திருத்தல் கூடும். அப்படியானால் சுந்தரரை அடுத்து அறுபது அல்லது எழுபது ஆண்டுகள் கழித்து வரும் அடிகளார் பண்முறைமையை ஏன் கையாளவில்லை?

திருவாசகப் பாடல்கள், அதனைப் பாடிய அடிகளார், பாடுபொருளா கவுள்ள தில்லைக் கூத்தன் ஆகிய மூவரையும் தனியே பிரித்துக் காணடல், கடினம் பாடிய அடிகளாரும், பாடுபொருளாகவுள்ள இறைவனும், திருத்த அங்கம் போன்ற சில பாடல்கள் தவிர ஏனைய பாடல்களுள் மறைத்து விடுகின்றனர். ஆதலால் திருவாசகப் பாடல்கள் ஏனைய பக்திப் பாடல்களைப் போல் சொல், சொல் தரும் பொருள். அப்பொருள் தோற்றுவிக்கும் உணர்வு என்ற முறையில் தொடங்கி, சொல்லும், பொருளும் மறைந்து உணர்வு ஒன்று மட்டுமே நின்றுவிடுகிறது. இதுவே திருவாசகத்தின் தனிச்சிறப்பாகும்.

திருவாசகம் இன்று பதிக்கப் பெற்றுள்ள முறையில் எந்தப்பகுதி முன்னர்ப் பாடப்பட்டது, எதனையடுத்து எது பாடப்பெற்றது, குறிப்பிட்ட பதிகம் எந்த ஊரில் பாடப்பட்டது என்பதை அறிந்துகொள்ளல் கடினமாகும். பெரும் பகுதிப் பதிகங்களுக்குத் 'தில்லையில் அருளியது' என்ற குறிப்பைத் தந்திருக் கின்றார்கள். உரையெழுதிய பெருமக்களும் இதுபற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. முழுவதும் திருப்பெருந்துறை பற்றிப் பாடும் இருபத்தி ரெண்டாவது பதிகத்தை 'கோயில் திருப்பதிகம்' என்று பெயரிட்டு தில்லையில் அருளியது என்று கூறியது ஏதோ குருட்டுத்தனமாகத் தலைப்பு தந்தமையை அறிவிக்கின்றது.

## திருவாசக மொழிநடை

திருவாசகப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அதில் பயன்படுத்தப்பட்ட மொழிக்கூறுகள் திருவாதவூரரின் மன இயல்பை எந்தளவுக்கு வெளிப் படுத்துகின்றன என்பதை இங்கு ஆராயலாம். அதவாது இப்பாடல்களில் கையாளப்பட்ட ஒலிகள், சொற்கள், வாக்கியங்கள், சொல்லாடல்கள் யாவும் மாணிக்கவாசகரின் மனநிலை, மற்றும் சூழ்நிலைக்கேற்ப

அமைந்துள்ளமையை அவரின் பாடல்களில் காணப்படும் பொருள் நடையானது வெளிப்படுத்துகிறது. இவ்வகையில் திருவாசகம் எனப்படும் இவ்வெட்டாந் திருமுறையில் தொகுக்கப்பட்ட ஒவ்வொரு பதிகங்களும் ஆய்விற்கு எடுக்க முடியாவிட்டாலும், ஓரளவிற்கு அவற்றின் மொழிநடை எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதென்பதை இக்கட்டுரை விளக்க முற்பட்டுள்ளது.

பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களைக் கற்பதென்பது எல்லோருக்கும் இயலாதாயினும், தமிழ் வேதங்களெனக் கருதப்படும் தேவார, திருவாசகங் களைப் படிப்பது என்பது எல்லோருக்கும் இயலக்கூடிய நற்செயலே யாகும். எனவே, சித்தாந்த சாஸ்திரங்களோடு சைவசமயத்தவர்கள் கற்க வேண்டியவை தோத்திர நூல்களாகும். தோத்திர நூல்கள் பன்னிரண்டு திருமுறைகளை உள்ளடக்கியவை. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் அவர்கள் அருளியுள்ள எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் சிவபுராணத்தைக் கொண்டு தொடங்குகிறது. சிவபுராணமோ 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தைக் கொண்டு தொடங்குகிறது. ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத அருமையும், பெருமையும் திருவாசகத்திற்கு உண்டு. இந்தத் திருமுறை ஒன்றுதான் இறைவனுடைய பஞ்சாட்சரத்தைச் சொல்லித் தொடங்குகிறது.

பிரார்த்தனைப் பத்து என்ற பதிகத்தில் அவர் பாடிய பாடல்கள் யாவும் கழிவிரக்கம் மேலீட்டால் பாடப்பாட்டவை. அங்கு அவர் கையாண்ட சொற்களின் தன்மையைக் கொண்டு அம்மொழிநடையை நோக்கினால், இங்கு இடமாற்றுப் பெயர்கள் எல்லாமே பயன்படுத்தப்பட்டுள்ளமைக்குத் தக்க சான்றுகள் காணப்படுகின்றன. குறிப்பாக இங்கு இடம்பெறும் பதினொரு பாடல்களிலும் நான், அடியேன், உன், தன், அவர் என மூவிடப்பெயர்களும் ஒருங்கே காணப்படுகின்றமை வியப்பிற்குரியது. மேலும் தன்மை இடத்திற்கு இவர் பலவிதமான சொல் வடிவங்களை கையாண்டமைக்கு உதாரணங்கள்.

1. நான்

*வெருளா வண்ணம், மெய் அன்பை*
*உடையாய்! பெற நான் வேண்டுமே.* (32:3)

2. யான்

*அடியார் சிலர் உன் அருள் பெற்றார்*
*ஆர்வம் கூற: யான் அவமே.........* (32:2)

3. எனை

*வேண்டும் வேண்டும் மெய் அடியார்*
*உள்போ விரும்பி எனை அருளால்*
*ஆண்டாய் அடியேன் இடர் களைந்த.* (32:4)

4. தன்

*மேவும் உன்-தன் அடியாருள்*
*விரும்பி யானும் மெய்மையே,*
*காவி சேரும் கயல் கண்ணாள்*
*பங்கா உன்-தன் கருணையினால்* (32:5)

5. அடியேன்

*தாரா அருள் ஒன்று இன்றியே*
*தந்தாய் என்று, உன் தமர் எல்லாம்*
*ஆராநின்றார் அடியேனும்,*
*அயலார் போல அயர்வேனோ?* (32:9)

இது போன்று முன்னிலை இடத்திலும் அவர் கையாண்ட சொற்கள் குறிப்பிடத்தக்கன.

1. உன்

*கடியேனுடைய கடுவினையைக்*
*களைந்து, உன் கருணைக்கடல் பொங்க.....* (32:2)

2. நீ

*உடையாய் நீயே அருளுதி என்று*
*உணர்த்தாது ஒளிந்தே, கழிந்தொழிந்தேன்* (32:7)

3. நின்

*கலந்து நின் அடியாரோடு*
*என்று வாரிர் களித்திருந்தேன்* (32:1)

4. உனக்கு

*அணி ஆர் அடியார் உனக்குள்ள*
*அன்புத் தாராய் அருள் அறியத்* (32:8)

படர்க்கை இடத்துக் கையாளப்பட்டவையாகக் காணப்படுவதை பின்வரும் உதாரணங்களில் காணலாம். நேரடியாக 'அவர்' என்ற படர்க்கைச் சொல்லைப் பயன்படுத்தாது வினைமுற்றின் மூலம் அதனை எடுத்துக் காட்டும் தன்மை இங்கு சிறப்புடையதாகும்.

1. பெற்றார்

*அடியார் சிலர் உன் அருள் பெற்றார்* (32:2)

2. கண்டார்

*"மருள் ஆர் மனத்து ஓர் உன்மத்தன் வருமால்"*
*என்று இங்கு எனைக் கண்டார்* (32:3)

3. வேண்டும்

*வேண்டும் வேண்டும் மெய் அடியார்*
*உள்போ, விரும்பி, எனை அருளால்* (32:4)

இவற்றுடன் உடையானே(32:6), கண்டார் (32:7), களிப்பாராய் (32:11) எனப் பலவகையான வினைமுற்றுக்கள் இப்பதிகத்தில் கையாளப்பட்டுள்ளன. மேலும், இப்பாடலடிகள் யாவும் வாக்கியங்களின் சிறப்புப் பண்புகளைக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எழுவாய், பயனிலை இயைபு, பெயரடைகள், வினையடைகள், வினைமுற்றுக்கள், துணைவினைகள், பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், இரட்டைக்கிளவிகள், அடுக்குச் சொற்கள் எனப் பல்வேறுவிதமான பண்புகளை விளக்குவனவாகவும் அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாய்வின்போது எடுத்துக்காட்டிய முப்பத்திரண்டாவது பதிகமான 'பிரார்த்தனைப் பத்து' போல ஏனைய பாடல்களும் இத்தகைய மொழிநடைக் கூறுகளை நிறையக் கொண்டுள்ளமையை அவதானிக்கலாம். இப்பதிகங்கள் மணிவாசகருக்கும், இறைவனுக்கும் உள்ள உறவு, பேச்சுமுறை போன்ற வற்றை எடுத்துக் காட்டுவதால் பிரதிப் பெயர்களின் (pronoun) பல்வேறு வடிவங்களை இங்கு அதிகமாகக் காணலாம். உதாரணமாக,

எங்கள் (458), எந்தை, எம்தாய் (276), எந்தை, யாய் (51), என அணி, ஆர் (636), எம்பிரான் (71), என்னால் (642), என்னை (120), எனை, நான் என்பது (506), எய்த்தேன், நாயேன் (421).

இங்கு சிறப்பாகக் கூறவேண்டிய சில விடயங்கள் என்னவென்றால் 'நாங்கள், நீங்கள், உங்கள்' என்ற மரியாதை ஒருமையோ, மரியாதைப் பன்மை வடிவங்களாகவோ காணப்படவில்லை என்பதாகும். இதிலிருந்து அடிகளாருக்கும், இறைவனுக்குமுள்ள உறவு மிகமிக நெருங்கியது என்று இச்சொல் வடிவங்களினால் புலப்படுகிறது.

அதேவேளை சம்பந்தர், அப்பர் தேவாரப் பதிகங்களில் இடம்பெற்ற 'நாங்கள்' (திருநள்ளாறும், திருவாலவாயும்) எனும் சொல்லும், அப்பர் தேவாரத்திலே இடம்பெற்ற நீங்கள், உங்கள், நீங்கள், எங்கள், ஆகிய சொற்களும் அவர்களுக்கும், இறைவனுக்கும் உரிய உறவுமுறையைச் சிறிது மரியாதையாக நோக்க வைக்கிறது. அதுமட்டுமன்றி பன்மை வடிவத் துடன் 'கள்' விகுதி சேர்ந்து இரட்டை வடிவங்கள் இடம்பெற்றுள்ளமைக்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன.

## திருவெண்பா

திருவெண்பா என்று காணப்படும் பதினொரு பாடல்களும் வெண்பா யாப்பில் அமைந்திருந்தலின் திருவெண்பா என்று பெயரிடப்பட்டுள்ளது. பொதுவாக உணர்ச்சிகளை வெளியிட வெண்பா யாப்பு அதிகம் துணைபுரிவதில்லை எனத் திறனாய்வாளர் கூறுவர். நான்கு சீர், ஆறு சீர், எட்டுச் சீர், என்ற முறையில் வரும் விருத்தப்பாக்களே கவிஞன் விருப்பம்போல் உணர்ச்சி களை வெளியிட உதவும்.

வெண்டளை இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டுவரும் வெண்பாவில் செய்திகளைக் கூறலாமே தவிர, உணர்ச்சிகளை வெளியிட வாய்ப்புக் குறைவு. என்றாலும் அடிகளார் பெரும் கவிஞர் ஆதலின் வெண்பா யாப்பில் இயற்றப்பெற்ற திருவெண்பா, பண்டாய நான்மறை என்பவற்றிற் கூட, 'ஆர்க்கோ அரற்றுகோ' என்று தொடங்கும் பாடலிலும்(618), 'பண்டாய நான்மறை' என்று தொடங்கும் பாடலிலும் (628), உள்ளத்தில் முகிழ்த்து எழும் உணர்ச்சிக்கு வடிவு தந்துள்ளார் என்பதை அறியலாம்.

உணர்ச்சிகளுக்கு முதலிடம் தந்து நூற்றுக்கணக்கான பாடல்களைப் பாடிய அடிகளார் செய்திகளை மட்டும் கூறுவதற்கு வெண்பா யாப்பை மேற்கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. வெண்பா யாப்பில் அமைந்துள்ள 'திருத்தசாங்கம்' ஏனைய திருவாசகப் பாடல்களோடு எந்த விதத்திலும் ஒப்பவைத்து எண்ணப்படக் கூடியது அன்று என்று முன்னரே கூறியுள்ளோம்.

திருவெண்பாவை அடுத்து வைக்கப் பெற்றுள்ள 'பண்டாய நான்மறை' யும் வெண்பா யாப்பில் தான் உள்ளது. வெண்பா யாப்பை ஓரளவு உணர்ச்சி தோன்ற வெற்றிகரமாக முதன்முதலில் கையாண்டவர் காரைக்கால் அம்மையாரே ஆவார். சங்க காலத்தில் வெண்பா யாப்பை அதிகமாக யாரும் கையாண்டதாகத் தெரியவில்லை.

ஆசிரியப்பாவிற்கும் உணர்ச்சிகளை வெளியிடும் இயல்பு குறைவு என்றாலும், வெண்பாவைப் போல் நான்கு அடியில் முடியாமல் தொடர்ந்து பல அடிகள் வருவதால் இக்குறையைச் சரிக்கட்ட முடிந்தது. விருத்தப்பாக்கள் அரங்கேறியவுடன் ஆசிரியப்பா, வெண்பா ஆகியவை தமது நிலையிலிருந்து இறங்கிவிட்டன.

இன்று கிடைக்கும் திருவாசகப் பதிப்புகளில் பதிகவைப்பு முறை ஒரு மாதிரியாகவே உள்ளது. இப்பதிகங்களைப் பிரித்து ஒவ்வொன்றிற்கு ஒவ்வொரு தலைப்புத் தந்து, யார் எப்பொழுது வெளியிட்டார்கள் என்று அறிய முடியவில்லை. இன்று நூலுள்ள முறையில் இருபத்தாறாவது பதிகமாக அமைக்கப்பெற்றுள்ளது அதிசயப்பத்தாகும். அதனை அடுத்துப் பதினைந்து பதிகங்கள் தள்ளி அமைந்திருப்பது அற்புதப்பத்தாகும். அதியசம், அற்புதம் என்ற இரண்டு சொற்களுமே ஏறத்தாழ ஒரே பொருளை உணர்த்து வனவாகும்.

## சென்னிப் பத்து

பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் "சென்னி" என்று வருதலால் "சென்னிப்பத்து" என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

*"சேவடிக்கண் நம் சென்னி மன்னி மலருமே,*
*சேவடிக்கண் நம் சென்னி மன்னி திகழுமே,*

*சேவடிக்கண் நம் சென்னி மன்னி பொலியுமே,*
*சேவடிக்கண் நம் சென்னி மன்னி சுடருமே."*

என்று முறையில் பாடல்கள் முடிகின்றன. சேவடிகள் என்ற சொல்லிலுள்ள கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு, இடம் என்ற பொருளைத் தருவதால், இந்தக் கண் உருபைச் சேவடிக்கே ஏற்றிப் பலரும் பொருள் கண்டுள்ளனர். இடத்து என்றும் பொருளுடைய இந்தக் கண்ணுருபைச் சென்னிக்கும் ஏற்றலாம்.

மலருமே, திகழுமே, பொலியுமே, சுடருமே என்ற சொற்கள் விளங்கின என்ற பொருளிலேயே ஆளப்பெற்றுள்ளன.

## யாத்திரைப்பத்து

இப் பதிகத்தில் வரும் பாடல்கள் சில தன்மைப் பன்மையாக அமைந்துள்ளன. 'ஒருப்படுமின்' போன்ற சொற்கள் தம்முடன் இருந்தவர்களை விழித்துப் பேசுவதுபோல் அமைந்துள்ளன. 'சிவபுர யாத்திரைக்குப் புறப்பட அனைவரும் தயாராக இருங்கள். புறப்படுவதற்குரிய காலம் வந்துவிட்டது' என்று கூறுவதுபோல் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

*"பூ ஆர் சென்னி மன்னன் எம்*
*புயங்கப் பெருமான் சிறியோமை*
*ஓவாது உள்ளம் கலந்து உணர்வு ஆய்*
*உருக்கும் வெள்ளக் கருணையினால்*
*ஆஆ என்னப் பட்டு அன்பு ஆய்*
*ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்*
*போவோம் காலம் வந்தது காண்*
*பொய்விட்டு உடையான் கழல் புகவே."*

இதுவரை கண்ட பாடல்களிலிருந்து இப்பாடல் சற்று வித்தியாசமானது. தம்முடைய அனுபவத்தை, தாம்பெற்ற அருட்சிறப்பைத் தன்மை ஒருமையிலும், தன்மைப் பன்மையிலும் முடித்துள்ளார். அந்த இடங்களில் சொல்லளவில் பன்மையாக இருப்பினும், அவற்றைத் தன்மை ஒருமையாகக் கொள்ளவேண்டும் என விளக்கப்பட்டுள்ளது.

*'புரள்வார் தொழுவார் புகழ்வார் ஆய்......................*
*அருள் ஆர் பெறுவார் அகல் இடத்தே*
*அந்தோ அந்தோ அந்தோவே.'*

எல்லையற்ற பச்சாதாபம் உண்டாவதை 'அந்தோ பரிதாபம்' என்று கூறும் பொருட்டு அதனை அந்தோ என்ற சொல்லை மும்முறை பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தி வெளிப்படுத்துகிறார்.

*திருச்சதகத்தில் புகுதலும் ஆளுதலும் (ஆன்மத்தி 36)*

திருவாசகப் பாடல்களில் பல இடங்களில் வரும் தொடர் 'புகுந்து ஆண்டான்' என்பதாகும். புகுதல், ஆட்கொள்ளுதல் என்ற இரண்டு செயல்கள் இந்தத் தொடரில் வேறுபடுகின்றன. பலருக்கு ஐயத்தைத் தருகின்ற பகுதி 'புகுந்து' என்ற சொல்லுக்குரிய பொருளாகும். 'புகு' என்ற பகுதியின் அடியாகப் பிறந்து, தல் என்ற விகுதி பெற்ற தொழிற்பெயராகும். இது ஒரு பொருள் நம் கண் காணவோ, அல்லாமலோ, புறத்தே இருந்து ஒரு வீட்டினுள் அல்லது அறையினுள் சென்று சேர்தலையே 'புகுதல்' என்ற சொல்லால் அறிகின் றோம். காற்று உட்புகுந்தது, ஒளி உட்புகுந்தது முருகன் அறையினுள் புகுந்தான் என்ற சொற்களைக் கவனித்தால், புகுந்து என்ற சொல்லின் பொருள் நன்கு விளங்கும். 'புகுதல்' என்று கூறியவுடன் புறத்தே இருக்கும் போது உள்ளே இல்லை. உள்ளே புகுந்தபோது புறத்தே இல்லை. முருகன் என்ற பகுதிப் பொருளுக்கு இந்த விதி பொருந்தும். எங்கும் நிறைந்திருக்கின்ற காற்று வெளியே இருக்கின்ற அதேநேரத்தில், உள்ளேயும் இருக்கின்றது. அதேநேரத்தில் வெளியே இருக்கின்ற காற்றின் ஒருபகுதி உள்ளேயும் புகுகின்றது. அதேபோல எங்கும் நிறைந்தவராகிய இறைவன் புறத்தேயும் உள்ளான், அகத்தேயும் உள்ளான். அதேபோல இறைவன் உள்ளேயும் இருக்கிறான், புறத்தேயும் இருக்கின்ற இறைவன் உள்ளே புகுவது போல அடிகளார் உணர்கிறார். இந்த உணர்வு அடிகளார் போன்றவர்களுடைய தனிப்பட்ட அனுபவம்.

வருதல் என்ற சொல்லை எடுத்தால், ஒரு பொருள் புடைபெயர்ந்து நகர்ந்து உள்ளே புகுதலை 'வருதல்' குறிக்கும். புடைபெயர்தலுக்கு நடத்தல் அல்லது நகர்தல் இன்றியமையாதது. ஆனால், இறைவன் புடைபெயர்தலோ, நடத்தலோ, நகர்தலோ இல்லாமலேயும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு

வந்துவிடுவான். இதனையே கம்பநாடன் 'வாராதேவரவல்லாய்' (கம்ப: 2570) என்று பேசுகிறான். அதாவது வருதலாகிய (புடைபெயர்தலாகிய) செயல் நடைபெறவில்லை ஆனால், வந்துவிட்டான். இதன் எதிராக 'வந்தாய் போல வாராதாய்' (நம:திருவாய்: 6-10-9) என்றும் பெரியோர் கூறுவர். இங்கே புடைபெயர்ச்சிச் செயலில்லாமலும் இறைவன் வந்தது போலப் பக்தன் உணர்ந்தான். ஆனால், உண்மையில் வரவில்லை.

அடுத்துவரும் 'ஆண்டான்' என்ற சொல் இறைவனைக் குறிப்பதாகும். 'புகுந்து' என்ற சொல்லுடன் 'ஆண்டான்' சேர்ந்து வரும்போது புகுந்த பிறகு தான் ஆண்டவனா, ஆட்சிகொண்ட பின் புகுந்தான் என்ற முறையில் ஐயங்கள் தோன்றுகின்றன. இவை இரண்டும் உண்மையில் ஒருங்கே நிகழ்கின்ற இரண்டு செயல்களாகும். சிவபுரத்தில் இருந்தே கூட அடிகளார் போன்ற ஆன்மாக்களை ஆண்டு கொள்ளமுடியும் 'புகுந்து' என்ற எச்சம் 'ஆண்டான்' என்ற வினை கொண்டு முடிவதாக நினைத்து, புகுதலாகிய செயல் முன்னரும் ஆளுதலாகிய செயல் அடுத்தும் நிகழ்ந்ததாகக் கொண்டு இடர்படத் தேவையில்லை. ஆண்டு கொண்டதை விட அடிகளார் அறியுமாறு உள்ளே புகுதல் அடிகளாருக்கு எல்லையற்ற பேரானந்தத்தை விளைக் கின்றது. எனவே, புகுந்ததையும் உணர்ந்தார், ஆட்கொண்டதையும் உணர்ந்தார். ஒருங்கு நிகழந்த இவ்விரு செயல்களையும் ஒன்றாக அடுக்கிப் 'புகுந்து ஆண்டான்' என்று பாடியுள்ளார்.

## நிகழ்ந்ததும் நிகழவேண்டியதும் (கண்டபத்து)

'பிறவியை வேரறுத்தான்', 'இனிப்பிறவாமல் காத்தாண்டு கொண்டான்' என்று இறந்தகால வாய்ப்பாட்டில் கூறும் அடிகளார், திடீரென்று 'செடிசேர் உடலம் இது சிதையச் செய்யாய்' என்று எதிர்கால வாய்ப்பாட்டாலும் பாடுவது எவ்வாறு பொருந்தும்? முதலிற் கூறியது உண்மை என்றால், பினனர் கூறிய இரண்டும் பொருந்தா பின்னர் கூறியவை உண்மை என்றால், முதலில் சொன்னவை பொருந்தா, இவற்றுள் எது உண்மை என்று சிலர் கேட்கின்றார்கள். சிலர் இவ்வாறு வெளிப்படையாகக் கேட்கும் அப்பக்தியை குறை கூறுவதாகக் கொள்வர். எனவே காலம் என்பது அவரவர் மனநிலை யைப் பொறுத்து மாறுபடும். இதனைப் புரிந்துகொண்டால் ஐயம் எழாது.

பிறவியை வேரறுத்தான், வினையைச் சுட்டெரித்தான் என்பவை உறுதியாக நிகழ்ந்தவை. அதனை அடிகளார் நன்கு அறிகிறார்.

## திருப்படையாட்சி

பொதுவாகவே திருவாசகத்தின் பிற்பகுதியில் எளிதில் பொருள் விளங்கிக் கொள்ள முடியாத அளவில் அமைந்துள்ளது. 'திருப்படையாட்சி' என்னும் இப்பகுதியாகும். 'ஆகாதே' என்ற சொல்லுக்குக் கூட ஒரேவகையாகப் பொருள் கொள்ளும் முறை காணப்படவில்லை. இச்சொல்லுக்கு 'ஆகும்' என்றும், 'ஆகாமற்' போய்விடுமோ? என்றும், 'ஆகாது' என்றும் பொருள் கூறியுள்ளனர். இந்த நிலையில் இந்த எட்டுப்பாடல்களில் ஐம்பத்தாறு முறை வரும் 'ஆகாதே' என்ற சொல்லுக்கு பொருள் கொள்வது எளிதான காரியமாக இல்லை. ஒவ்வொரும் பாடலிலும் வரும் 'ஆகாதே' என்ற சொல் ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். 'ஆகாதே' என்ற எதிர்மறைப் பொருளையும், 'ஆகும்' என்ற உடன்பாட்டுப் பொருளையும் தேவைப்பட்ட இடங்களில் ஏற்றுக் கொள்ளுதல் பொருத்தமுடையதோ என்று தோன்றுகிறது.

*கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு*
*களிப்பான ஆகாதே.*

............................

இரண்டு கண்களும் கடவுளின் திருவடிகளைக் கண்டுகளிப்பதற்குரியன வாகும். இங்கு 'ஆகாதே' என்ற சொல் ஆகமாட்டாவா என்ற எதிர்மறை வினாவாக அமைந்து ஆகும் என்ற பொருளைத் தந்து நிற்கிறது. 'கண்கள் இரண்டும்' என்பதிலுள்ள உம்மையை முற்றும்மை என்று கொள்ளாமல், இறந்தது தழுவிய எச்ச உம்மையாகக் கொண்டு கண்கள் காண்பதற்கு அடிப்படை உதவி புரிகின்ற மனம் என்ற ஒன்றையும் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் நலம். இரண்டு கண்களும் மனமும் அவன் திருவடிகளைக் கண்டுகளிப்பதற்கு உரியனவாகும். எனவே, இப்பாடல் முழுவதிலும் 'ஆகாதே' என்ற சொல் ஓடும் என்ற உடன்பாட்டு பொருளிலேயே வருவதைக் காணலாம்.

## முடிவுரை

சைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சிலருக்கு மட்டுமல்லாமல், மனித சமுதாயம் முழுவதற்கும், இன்றைக்கு மட்டுமல்லாமல் இனி வரப் போகும் எந்த நூற்றாண்டுக்கும் பொருத்தமாக அமைந்துள்ளது திருவாசகம். இதனைப் படிக்கின்றவர்கள் தங்களுடைய கலக்கமடைந்த வாழ்விற்கு ஒரு வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கம் என்று இதனைக் கருதுவர். இப்பாடல்களில் காணப்பெறும் சிவன் என்ற சொல்லிற்குப் பதிலாக, இறைவன் என்ற பொதுப்பெயரைத் தந்துவிட்டால், இந்த உலகத்திலுள்ள எல்லாச் சமயத்தாரும், இதனைப் பெரும்பாலும் ஏற்றுக்கொள்வார்.

## உசாத்துணை நூல்கள்


திருவாசகம் சில சிந்தனைகள் அ.ச. ஞானசம்ந்தன், கங்கை புத்தக நிலையம், (2001) திருவாசகம் 51 பதிகம் - 658 பாடல்கள்.

சுப்பிரமணிய பிள்ளை, கா. திருவாசகம் மூலமும், பாரி நிலையம், சென்னை, 2007.

ஞானசம்பந்தன், அ.ச. திருவாசகம் சில சிந்தனைகள்- பாகம் 5 கங்கை புத்தக நிலையம், 2001.

திருவாசகம், சென்னை, 1956.

பொன்னையா, ஆ. சிவபுராணம், தொளிபொருள் விரிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 2003.